## சுருக்கம்

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – "**சோக்கு சுந்தரம்**" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை

**அரசாணை (டி) எண். 506** **நாள்: 23.12.2014**
**ஜய, மார்கழி 08,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.02, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/27057/2014, நாள் 01.09.2014 தேர்வுக்குழு எண். 47/2014–2015.
4. தமிழ் வளர்ச்சி இயக்குநர் கடித ந.க.எண்.8071/நிதி–3/2014, நாள் 17.09.2014.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. தற்போது முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர் பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், மேற்கண்ட குழு "**சோக்கு சுந்தரம்**" திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஆறு உறுப்பினர்களில் ஐந்து உறுப்பினர்கள் கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஓர் அலுவல் சார்ந்த உறுப்பினர் மட்டும் திரைப்படத்தின் பெயர் முற்றிலும் தமிழ் பெயர் அல்ல என்பது உள்ளிட்ட சில காரணங்களை முன் வைத்து இத்திரைப்படம் கேளிக்கை வரிவிலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளார்.

3. இந்நேர்வில், தமிழ் வளர்ச்சி இயக்குநர், நான்காவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், "**சோக்கு சுந்தரம்**" எனும் திரைப்படத்தின் தலைப்பில் "**சோக்கு**" என்பது தமிழ்ச் சொல் அல்ல, உருது மொழி ஆகும் என்றும், "**சோக்கு**" என்றால் தமிழில் ஆடம்பரம் என்ற பொருள் ஆகும் என்றும், தமிழில் பிற மொழிச் சொற்கள் கலந்து பேசப்படுவதுபோல் இச்சொல்லும் தமிழில் கலந்து பேசப்பட்டு வருகிறது என்றும், தமிழில் பெயரிடப்பட்ட திரைப்படங்களுக்கு மட்டுமே கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்பெற வேண்டும் என்பது கேளிக்கைவரி விதி என்றும், எனவே விதிமுறையின்படி இப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என்றும் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், "**சோக்கு சுந்தரம்**" எனும் தலைப்பில் உள்ள "**சோக்கு**" எனும் சொல் தமிழ்ச் சொல் அல்லாது உருது மொழி சொல்லாக உள்ளது எனும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1)த் துறை, நாள் 21.7.2011–ல் வரையறுக்கப்பட்டுள்ள தமிழில் பெயரிடப்பட வேண்டும் எனும் நிபந்தனையை பூர்த்தி செய்யாததால், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் "**சோக்கு சுந்தரம்**" எனும் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கையை நிராக்கரிக்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.
நகல்:
சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 23/12/2014
23/12/14